# ஸ்ரீமணவாள மாமுநிகள் திருமஞ்சன கட்டியம்

ஸ்தபாத்தின்போது

நாயந்தே! நாயந்தே!

ஸ்ரீமத்ரங்கம் ஜயது பரமம் தாமதேஜோ நிதாநம்
பூமா தஸ்ய ப்ரவது குசலீ கோபி பூமாஸஹாய: ।
திவ்யம் தஸ்மை திசது விபவம் தேசிகோ தேசிகாநாம்
காலே காலே வரவரமுநி: கல்பயந் மங்களாநி ॥

1. இப்புவியில் அரங்கேசர்க்கு ஈடளித்த பெருமாள்!
2. எழில் திருவாய்மொழிப்பிள்ளை இணையடியாம் பெருமாள்!
3. ஐப்பசியில் திருமூலத்து அவதரித்த பெருமாள்!
4. அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும் பெருமாள்!
5. எப்புவியும் ஸ்ரீசைலம் ஏந்த வந்த பெருமாள்!
6. ஏராரும் எதிராசர் என உதித்த பெருமாள்!
7. முப்புரிநூல் மணிவடமும் முக்கோல் தரித்த பெருமாள்!
8. மூதறியும் மணவாள மாமுனியாம் பெருமாள்!

நம்தேசிகர் சிகாமணிப் பெருமாள்!

1. தேவரீர் திருவடித்தாமரைகளில்.... (35) முடிய—எம்பெருமானார் திருமஞ்சனக் கட்டியம்,

இப்போது தேவரீர் திருமஞ்சனம் கொண்டருள எழுந்தருளியிருக்கும் அழகிது.

ஏதேனும் சிந்தை மருளோ .... தேஜஸ்ஸோ—எம்பெருமானார் திருமஞ்சனக் கட்டியத்தில் போல்,

ஸஹஸ்ரதார திருமஞ்சனக் கட்டியம்

நாயன்தே! நாயன்தே!

ஸத்யம் ஸத்யம் புநரிதி புரா ஸாரவித்பிர் யதுக்தம்
ப்ருமச் ச்ரோத்ராத் ச்ருணுத ஸுதியோ மத்ஸரம் வர்ஜயித்வா
தத்வம் விஷ்ணு: பரமநுபமம் தத்பதம் ப்ராப்ய மேவம்
தத்ஸம் ப்ராப்தௌ வரவரமுநிர் தேசிகோ திர்க்கதர்சீ ॥

பூத்வா பூயோ வரவரமுநிர் போகிநாம் ஸார்வபௌம:
ரக்ஷத் யஸ்மாந் ரகுகுலபதே ராச்ரிதோ பத்ரபீடம் ।
தம்த்வம் கத்வா வ்ரஜ சரண மித்யாதிசத் ராகவோயம்
ஸ்வப்நே ஸோயம் வரவரமுநிஸ் ஸம்ச்ரியோ மாத்ருசாநாம் ॥

1. செந்தமிழ் வேதியர் சிந்தை மகிழ்ந்திட ஈடுரைத்த அசைவோ?
2. சிருலகாரியர் நற்கலை உண்மை விரித்துரைத்த அசைவோ?
3. மந்த மதிப்புவி மானிடர் உய்ந்திட வந்தளித்த அசைவோ?
4. மாசறுஞானியர் சேர் எதிராசரை மண்டி வாழ்த்தும் அசைவோ?
5. கந்த மலர்ப் பொழில் குருகாதிபன் அந்தமிழ் சிந்தை செய்த அசைவோ?
6. காரமர் மேனி அரங்கரை நாடொறும் கண்டு போற்றும் அசைவோ?

சந்தொடு மஞ்சளும் எண்ணெய் புளிப்பழம் அஞ்சனமாம் இவையாம் மஞ்சனமாடி மகிழ்ந்தருளீர்—மணவாள மாமுனியே! ஜயவிஜயீ பவ.